IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.191/2019

Deposition of Witness PW5

Name : வித்யாராணி Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.05.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் இன்று ஆஜர் இல்லை. எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 82ன் கீழ் பிரகடணப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் அந்தியூரில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். நான் **10**ம் வகுப்பு படித்துள்ளேன். ஈரோடு சக்தி ரோட்டில் உள்ள **SAR Complex**ல் வின்னர்ஸ் இந்தியா என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் **2010** முதல் **2012** வரை அலுவலக நிர்வாகியாக வேலைசெய்து வந்தேன். அந்த சமயத்தில் பெருந்துறை ரோடு பரிமளம் மகால் எதிரில் உள்ள ஹனிவல் அப்பார்ட்மெண்டில் குடியிருந்த சூர்யா என்கிற ரமேஷ் சந்தர் எங்கள் அலுவலகத்திற்கு வந்து இடம் வாங்குவது தொடர்பாக பேசியதில் எனக்கு அறிமுகமானார். அடிக்கடி எனக்கு தொலைபேசியில் தொடப்பு கொண்டு பேசுவார். என்னுடன் பேசும்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.05.07 12:14:02 +0530

பொழுது அவர் அடிக்கடி வெளிநாடு செல்வதாகவும், பல நபர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாங்கி கொடுத்ததாகவும் கூறினார்.

மேற்படி விசயத்தை அருகில் குடியிருந்தவர்களிடம் தெரிவித்த போது பாலமுருகன் , நவீன் ஆகியோர் அதை பற்றி என்னிடம் கேட்க நான் சூர்யா என்னிடம் சொன்ன விவரத்தை நான் அவர்களிடம் சொன்னேன். அதன் அடிப்படையில் கடந்த 2012 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் நவீன், பாலமுருகன் மற்றும் அவர்களது பெற்றோர்களுடன் நானும் ஈரோடு சென்று சூர்யாவை அவரது வீட்டில் காலை 11 மணியளவில் சந்தித்து பேசினோம். அப்போது சூர்யாவின் தாய் அமிர்தவல்லியும் அவருடன் இருந்தார். அப்போது சூர்யா அவர்களது படிப்பு சம்பந்தமான விபரங்களை குறித்து தெரிந்து கொண்டு அவர்களுக்கு சிங்கப்பூரில் நல்ல சம்பளத்தில் வேலை வாங்கி தருவதாக கூறினார்.

மேலும் சூர்யா அவருக்கு சிங்கப்பூர் உள்ளிட்ட பல வெளிநாடுகளில் உள்ள பெரிய பெரிய கம்பெனிகள் தெரியும் என்றும், பல பேர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாங்கி கொடுத்துள்ளதாகவும் எங்களிடம் கூறினார். மேற்படி வேலை சம்பந்தமாக ஒவ்வொரு நபரும் ரூ.2,92,000/- கொடுக்க வேண்டும் என்று கூறினார். அங்கிருந்த சூர்யாவின் தாயார் தான் நேதாஜி ரோடு, ஈரோட்டில் மாருதி காம்ப்ளக்ஸ் பைனான்ஸ் நிறுவனத்தை நடத்தி வருவதாக ஒரு விசிட்டிங் கார்டை எங்களிடம் காண்பித்து எனது மகன் கண்டிப்பாக வேலை வாங்கி கொடுத்து விடுவார் என கூறி எங்களை நம்ப வைத்தார்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.05.07 12:14:09 +0530

அதனை நம்பி நவீனும், பாலமுருகனும் சூர்யாவிடம் பணம் கொடுத்தார்கள். கல்வி சான்றுகளையும், பாஸ்போட்டுகளையும் சூர்யாவிடம் கொடுத்தார்கள். மேற்படி பணத்தை பெற்றுக் கொண்டதற்கு பின்னிட்டு வேலை பார்க்க போகும் சிங்கப்பூர் நிறுவனம் மற்றும் என்ன வேலை சம்பளம் எவ்வளவு என்ற விவரங்களை இமெயில் மூலம் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். அதன் பின்னிட்டு சூர்யா கூறியது போல் யாருக்கும் வேலை வாங்கி கொடுக்காமல் வசூல் செய்த பணத்துடன் சூர்யாவும், அவரது தாயாரும் வீட்டை காலி செய்துவிட்டு சென்றுவிட்டார்ள். பின்னிட்டு விசாரித்தபோது பல நபர்களிடம் வேலை வாங்கி தருவதாக கூறி பணம் மற்றும் நகைகளை பெற்றுக் கொண்டு ஏமாற்றிய விவரம் தெரியவந்தது. பின்னிட்டு பாலமுருகன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.05.07 12:14:18 +0530

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

## C.C No.191/2019

## Deposition of Witness PW 6

| | | | |
|---|---|---|---|
| Name | : குணசேகரன் | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.05.2026

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் இன்று ஆஜர் இல்லை. எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 82ன் கீழ் பிரகடணப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் குடியிருந்து டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2012ம் வருடம் ஈரோடு சக்தி சூப்பர்மார்க்கெட் அருகில் இருக்கும் ஆதித்யா பிளாசா முதல் தளத்தில் சத்யமூர்த்தி நடத்தி வந்த நாமகிரி ஏர் டிராவல்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன். 26.10.2012ம் தேதி ஈரோட்டை சேர்ந்த சூர்யா என்பவர் சிங்கப்பூர் செல்வதற்காக மணி என்பரின் மகன் மூர்த்தி என்பவருக்கு விமான பயணத்திற்கான டிக்கெட் கேட்டு ரூ.8000/- பணம் கொடுத்தார். நான் அதை பெற்றுக்கொண்டு மூர்த்தி என்பவர் பெயரில் ரசீது சூர்யாவிடம் கொடுத்தேன். ரசீது எண்.109 ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.05.07 12:14:28 +0530

ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ரசீது நகல் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மூர்த்திக்கு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மூலம் சிங்கப்பூர் செல்வதற்கு  R PNR – 26SW202 ஆன்லைன் டிக்கெட்டை சூர்யாவிடம் கொடுத்தேன். சூர்யா பலபேரிடம் சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக பணம் பெற்று ஏமாற்றி தலைமறைவான விவரத்தை பின்னர் கேள்விபட்டேன். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.05.07 12:14:33 +0530